# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குழித்துறை நகராட்சி

**குழித்துறை நகர் மன்றத்தின் 24–04–2017 ம் தேதி திஙகட் கிழமை நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பொருட்கள் மற்றும் தீர்மானஙகள்**

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சியால் ஆண்டுதோறும் நடைபெறும் ஆடி அமாவாசையை முன்னிட்டு வாவுபலி பொருட்காட்சியை குழித்துறை நகராட்சி நடத்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகும் (ந.நி.3) துறை அரசாணை எண்.34, நாள் 22–6–2000–ன்படி குழித்துறை நகராட்சிக்கு நிரந்தர அனுமதி வழஙகப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின்படி 92–வது வாவுபலி பொருட்காட்சியினை 14–07–2017 முதல் 02–08–2017 வரை 20 தினஙகள் நடத்தவும் 23–07–2017 அன்று ஆடி அமாவாசை தினமாக கொண்டவும் மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.160/2017/அ2.

**நகர்மன்றத் தீர்மான எண்.2844,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண்.2

2016–2017–ம் ஆண்டிற்கு வரி வசூல் விளம்பர அறிவிப்பினை வாகனம் மூலம் விளம்பரம் செய்வதற்கு ஒலிப்பெருக்கி அருள் எலக்ட்ரிக்கல்ஸ் மற்றும் சவுண்ட் நிறுவனம் மூலம் வாடகைக்கு எடுத்து மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.40,000/– (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.146/2017/அ1.

**நகர்மன்றத் தீர்மான எண்.2845**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 3

குழித்துறை நகராட்சி அலுவலக ஜெராக்ஸ் இயந்திரம் பழுதின் காரணமாக தனியர் நிறுவனத்திடம் ஜெராக்ஸ் மற்றும் பைண்டிங செய்த வகைக்கு செலவினமாக ரூ.2,107/– வரப்பெற்றுள்ளது. ஆத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
ந.க.எண்.146/2017/அ1

**நகர்மன்றத் தீர்மான எண்.2846**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 4

2017–2018–ம் ஆண்டிற்கு குழித்துறை நகராட்சிக்குத் தேவையான எழுதுப்பொருட்கள் படிவஙகள், பதிவேடுகள், கேட்பு அறிவிப்பு படிவஙகள், கணினி டோனர்கள், பிறப்பு இறப்பு படிவஙகள், சிட்டா, A4 Legal பேப்பர்கள் ஆகியவற்றை அரசு அஙகீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சக்கத்திலிருந்து வாஙகிட உத்தேச மதிப்பீடு ரூ.8,00,000/– (ரூபாய் எட்டு இலட்சம்) அதை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அ.கு.:– 1) மன்றம் அனுமதிக்கலாம்
2) பொருளில் கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.2847**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 5

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வெட்டுமணி காய்கறி சந்தையினை 1–4–2015 முதல் மூன்று வருட காலத்திற்கு திரு.பி. ராஜாமணி, த/பெ. பொன்னு பேடுட்டுவிளை, என்பவருக்கு ஒப்படைக்கப்பட்டது. 2015–2016 மற்றும் 2016–2017 ஆகிய இரணடு வருடஙகளுக்கான குத்தகை தொகை மற்றும் அனைத்து வரிகளும் செலுத்தியுள்ளார். தற்போது 2017–2018–ம் வருடத்திற்கு தொகையினை செலுத்தத் அறிவிப்பு அனுப்பப்பட்டதில் குழித்துறை மேம்பாலம் கட்டும் பணி ஆரம்பமானதாலும், வெட்டுமணி சந்தையில் வாகனஙகள் வராததாலும், சப்பாத்து தடுப்பாணை கட்டுதல் பணியில் பாதிக்கப்பட்டுள்ளதால் வியாபாரம் ஒன்றும் நடைபெறவில்லை எனவும் ஆகிய வருட குத்தகை தொகையில் 1/4 பஙகு ஆக குறை செய்து தர கேட்டும் இல்லையெனில் குத்தகை உரிமத்தினை 1–4–2017 முதல் ரத்து செய்துதர கேட்டும் விண்ணப்பம் செய்துள்ளார்.

மேற்படி விண்ணபத்தில் கோரியுள்ள விபரஙகள் அனைத்தும் குத்தகை விதிகளுக்கு புறம்பானதாகும் குத்தகை காலம் மூன்று வருடும் என்பதால் இன்னும் ஒருவருட குத்தகை காலம் இருப்பில் உள்ளதால் இதனால் ஏற்படும் அனைத்து நிதியிழப்பிற்கும் குத்தகைதாரரை பொறுப்பாக்கி அன்னாருடைய வைப்புத்தொகை பறிமுதல் செய்து மீண்டும் மறுஏலம்/ மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று வருடு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.2848,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 6

குழித்துறை நகராட்சியில் குடிநீர் நிதியின்கீழ் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 24–03–2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | வார்டு 20 முத்தாரவிளையில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின் விசை அமைத்தல் | 2.00 | 1) திரு.R. சுரேஷ் ராஜ்<br>2) திரு.G. சுரேஷ் | -<br>0.35% | 0.84%<br>- |
| 2 | வார்டு 9 செக்காலத்தெருவில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின் விசை அமைத்தல் | 2.00 | 1) திரு.G. சுரேஷ்<br>2) திரு.R. சுரேஷ் ராஜ் | -<br>0.26% | 0.18%<br>- |
| 3 | வார்டு 5 வி.எல்.சி. மைதானத்தில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின்விசை அமைத்தல் | 2.00 | 1) திரு.C. சுரேஷ்<br>2) திரு.D. ஜஸ்டின்குமார் | -<br>0.79% | 0.07%<br>- |
| 4 | வார்டு 21 சிறியகாட்டுவிளையில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின் விசை அமைத்தல் | 2.00 | 1) திரு.K. டேவிட்<br>2) திரு.P. ஜெயக்குமார் | -<br>0.03% | 0.21%<br>- |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ற்கு திரு.R. சுரேஷ் ராஜ், 2–ற்கு திரு.G. சுரேஷ், 3–ற்கு திரு.C. சுரேஷ், 4–ற்கு திரு.K. டேவிட் ஆகியோர் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரிக்க மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2849**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 7</u>

குழித்துறை நகராட்சியில் குடிநீர் நிதியின்கீழ் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 24–03–2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வைஸ்ராய் சாலை மற்றும் ஊற்றநகரை பகுதிகளுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய 90mm PVC பைப் லைன் அமைத்தல் | 1.50 | 1) திரு.C. சுரேஷ்<br>2) திரு.D. ஜஸ்டின்குமார் | -<br>3.42% | 0.01%<br>- |
| 2 | குழித்துறை நகராட்சி 21 வார்டுகளிலும் குடிநீர் வினியோக குழாய்கள், பிரதான குழாய்கள், சுலீஸ் வால்வுகள் மற்றும் நகராட்சி பகுதிகளிலுள்ள பொது குழாய்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பணி செய்தல் | 3.00 | 1) திரு.C. சுரேஷ்<br>2) திரு.D. ஜஸ்டின்குமார் | -<br>1.35% | 0.04%<br>- |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 மற்றும் 2–ற்கு மதிப்பீட்டை விட குறைவான விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.C. சுரேஷ் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்க மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2850,**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 8</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலைய கடை B பிளாக் 6 மற்றும் 12–க்கு குத்தகை காலம் முடியும் முன்னரே குத்தகைக்கு எடுக்கப்பட்ட கடையினை உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் கடையினை தொடர்ந்து நடத்த இயலாது எனவும் அவர்கள் செலுத்திய வைப்புத்தொகையினை திருப்பி வழஙகப்பட்டு B பிளாக் கடை குத்தகைதாரர் திரு. ரெத்தினகுமார் மற்றும் B பிரிவு 12 கடை குத்தகைதாரர் பீட்டர் மாத்தியு சிங விண்ணப்பம் செய்துள்ளார்.

நகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்படாத வண்ணம் கடையினை திரும்ப மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2851,**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 9</u>

குழித்துறை நகராட்சி அலுவலக பயன்பாட்டிலுள்ள Muratec Xerox இயந்திரத்திற்கு உபயோகப்படுத்தப்படும் டோனர்கள் வினியோகம் செய்ய 14–3–2017 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | Bindu Studio & Video, Marthandam | 1 | 3450 |
| 2 | Dharsini Global Hub, Marthandam | 1 | 3250 |
| 3 | Diamond Offset Printers TVM Road | 1 | 3300 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2 Dharsini Global Hub கொடுத்துள்ள விலைப்புள்ளியினை அங்கீகரிக்க மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2852,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 10

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் TN75P-1813–ற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு வேகக் கட்டுப்பாட்டு கருவி, தகுதிச்சான்று கட்டணம், Sticker ஒட்டிய செலவு மற்றும் புகைச்சான்று கட்டணம் ஆக மொத்தம் ரூ.17000/– திரு. விஜயகுமார், ஒட்டுநரால் செலவிடப்பட்டுள்ளமையால் மேற்படி தொகையினை திரு. விஜயகுமார், ஒட்டுநருக்கு வழங்கிட மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2853,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 11

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் காய்கறி சந்தைக்குள் அமைந்திருக்கும் IDSMT கடை எண்.1–க்கு குத்தகைதாரர் திருமதி. டெய்சிபாய் என்பவர் நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD)No.4252/17 நகராட்சியின் சார்பாக ஆஜராகவும் வழக்கிற்கான இந்த வழக்கினை எடுத்து நடத்த திரு. வாமனன் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞரிடம் ஒப்படைத்துள்ளதால் அன்னாருக்கு வழங்க வேண்டிய வழக்கு கட்டணத்திற்கான தொகையினை வழங்கிட மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2854,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 12

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் காய்கறி சந்தைக்குள் அமைந்திருக்கும் IDSMT கடை எண்.2–க்கு குத்தகைதாரர் திருமதி. டெய்சிபாய் என்பவர் நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD)No.4253/17 நகராட்சியின் சார்பாக ஆஜராகவும் வழக்கிற்கான இந்த வழக்கினை எடுத்து நடத்த திரு. வாமனன் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞரிடம் ஒப்படைத்துள்ளதால் அன்னாருக்கு வழங்க வேண்டிய வழக்கு கட்டணத்திற்கான தொகையினை வழங்கிட மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2855,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 13

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் காய்கறி சந்தைக்குள் அமைந்திருக்கும் IDSMT கடை எண்.6–க்கு குத்தகைதாரர் திருமதி. டெய்சிபாய் என்பவர் நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD)No.4254/17 நகராட்சியின் சார்பாக ஆஜராகவும் வழக்கிற்கான இந்த வழக்கினை எடுத்து நடத்த திரு. வாமனன் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞரிடம்

ஒப்படைத்துள்ளதால் அன்னாருக்கு வழஙக வேண்டிய வழக்கு கட்டணத்திற்கான தொகையினை வழஙகிட மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2856,**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 14</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் காய்கறி சந்தைக்குள் அமைந்திருக்கும் IDSMT கடை எண்.11–க்கு குத்தகைதாரர் திருமதி. டெய்சிபாய் என்பவர் நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD)No.4255/17 நகராட்சியின் சார்பாக ஆஜராகவும் வழக்கிற்கான இந்த வழக்கினை எடுத்து நடத்த திரு. வாமனன் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞரிடம் ஒப்படைத்துள்ளதால் அன்னாருக்கு வழஙக வேண்டிய வழக்கு கட்டணத்திற்கான தொகையினை வழஙகிட மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2857,**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 15</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் காய்கறி சந்தைக்குள் அமைந்திருக்கும் IDSMT கடை எண்.12–க்கு குத்தகைதாரர் திருமதி. டெய்சிபாய் என்பவர் நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD)No.4257/17 நகராட்சியின் சார்பாக ஆஜராகவும் வழக்கிற்கான இந்த வழக்கினை எடுத்து நடத்த திரு. வாமனன் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞரிடம் ஒப்படைத்துள்ளதால் அன்னாருக்கு வழஙக வேண்டிய வழக்கு கட்டணத்திற்கான தொகையினை வழஙகிட மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2858,**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 16</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் காய்கறி சந்தைக்குள் அமைந்திருக்கும் IDSMT கடை எண்.13–க்கு குத்தகைதாரர் திருமதி. டெய்சிபாய் என்பவர் நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD)No.4258/17 நகராட்சியின் சார்பாக ஆஜராகவும் வழக்கிற்கான இந்த வழக்கினை எடுத்து நடத்த திரு. வாமனன் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞரிடம் ஒப்படைத்துள்ளதால் அன்னாருக்கு வழஙக வேண்டிய வழக்கு கட்டணத்திற்கான தொகையினை வழஙகிட மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2859,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 17

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் காய்கறி சந்தைக்குள் அமைந்திருக்கும் IDSMT கடை எண்.19–க்கு குத்தகைதாரர் திருமதி. டெய்சிபாய் என்பவர் நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD)No.4259/17 நகராட்சியின் சார்பாக ஆஜராகவும் வழக்கிற்கான இந்த வழக்கினை எடுத்து நடத்த திரு. வாமனன் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞரிடம் ஒப்படைத்துள்ளதால் அன்னாருக்கு வழஙக வேண்டிய வழக்கு கட்டணத்திற்கான தொகையினை வழஙகிட மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2860,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 18

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் காய்கறி சந்தைக்குள் அமைந்திருக்கும் IDSMT கடை எண்.26–க்கு குத்தகைதாரர் திருமதி. டெய்சிபாய் என்பவர் நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD)No.4260/17 நகராட்சியின் சார்பாக ஆஜராகவும் வழக்கிற்கான இந்த வழக்கினை எடுத்து நடத்த திரு. வாமனன் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞரிடம் ஒப்படைத்துள்ளதால் அன்னாருக்கு வழஙக வேண்டிய வழக்கு கட்டணத்திற்கான தொகையினை வழஙகிட மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2861,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 19

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் காய்கறி சந்தைக்குள் அமைந்திருக்கும் IDSMT கடை எண்.27–க்கு குத்தகைதாரர் திருமதி. டெய்சிபாய் என்பவர் நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD)No.4256/17 நகராட்சியின் சார்பாக ஆஜராகவும் வழக்கிற்கான இந்த வழக்கினை எடுத்து நடத்த திரு. வாமனன் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞரிடம் ஒப்படைத்துள்ளதால் அன்னாருக்கு வழஙக வேண்டிய வழக்கு கட்டணத்திற்கான தொகையினை வழஙகிட மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2862,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 20

குழித்துறை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சியின் சட்டம் **1920** பிரிவு **306**–ன் கீழ் இயற்றப்பட்டுள்ளபடி பொது மக்களுக்கு தெரியும்

உண்மை தினமணி பத்திரிகையில் 07–04–2017–ல் விளம்பரம் செய்தமைக்கு Madurai Express Publication என்ற நிறுவனத்திற்கு தொகை ரூ.50215/–ஐ வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.2863,**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் 21</u>

குழித்துறை நகராட்சியில் ஒப்பந்ததாரராக பணிசெய்த திரு.கே.நேசைய்யன் என்பவரது பட்டியல்ல் பிடித்தம் செய்யப்பட்ட கீழ்காணும் பணிகளுக்கான EMD மற்றும் FSD தொகைகள் திருப்பி வழஙகப்படவேண்டியுள்ளது.

| வரிசை எண் | வேலையின் பெயர் | EMD , FSD |
|---|---|---|
| 1 | வார்டு எண் 13 சிஙகிளேயர் தெருவில் கல்லறைத்தோட்டம் சாலையில் பேவர்பிளாக் அமைக்கும் பணி செய்தல் | ரூ.4750/–<br>ரூ.4750/– |
| 2 | வார்டு 13 சிஙகிளேயர் தெரு கல்லறைத்தோட்டம் கிளை சாலையில் பேவர்பிளாக் அமைத்தல் | ரூ.950/–<br>ரூ.950/– |
| 3 | வார்டு எண் 11 வெட்டுமணி சப்பாத்து சாலையில் இருக்கும் மீன்சந்தையில் மேற்கூரை அமைத்தல் | ரூ.2000/–<br>ரூ.2000/– |
| 4 | வார்டு 13 சாமுவேல் தெருவில் பேவர்பிளாக் மற்றும் 2 இஞ்ச் பிவிசி பைப்லைன் அமைத்தல் | ரூ 4000/–<br>ரூ.4000/– |
| 5 | பெருந்தெருவில் உள்ள நகர்ப்புற சுகாதார மையத்தில் மருத்துவர் அறையினை பிரித்திடவும் முன்புறம் மற்றும் பின்புறம் நோயாளிகள் அமர்வதற்கு கூரை வேமைக்கும் பணி செய்தல் | ரூ.2300/–<br>ரூ.2300/– |

மேற்கண்ட தொகைகளை ஒப்பந்ததாரர் திரு.கே.நேசைய்யனுக்கு திருப்பி வழஙக மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2864,**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் 22</u>

சென்னை நகராட்சி நிர்வாக ஆணைர் அவர்களின் ந.க.எண் 29727/2016/இ3 நாள் 21–4–2017ல் அறிவுறுத்தியுள்ளபடிகுழித்துறை நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் சாலைகளை நகராட்சி வசம் எடுத்துக்கொள்ள மன்றம் தீர்மானிக்கிறது.

1. <u>தேசிய நெடுஞ்சாலை</u>
   பம்மம் முதல் திருத்துவபுரம் வரை

2. <u>மாநில நெடுஞ்சாலைகள்</u>
   a) மார்த்தாண்டம் ஜஙசன் முதல் கருஙகல் சாலை நகராட்சி எல்கை வரை
   b) மார்த்தாண்டம் ஜஙசன் முதல் குலசேகரம் சாலை நகராட்சி எல்கை வரை
   c) மார்த்தாண்டம் ஜஙசன் முதல்மேல்புறம் சாலை நகராட்சி எல்கை வரை
   d) குழித்துறை ஜஙசன் முதல் ஆலஞ்சோலைசாலை நகராட்சி எல்கை வரை
   e) குழித்துறை ஜஙசன் பாலவிளை சாலை நகராட்சி எல்கை வரை
   f) வெட்டுவெந்நி முதல்தேஙகாய் பட்டணம் சாலை நகராட்சி எல்கை வரை

**நகர்மன்றத் தீர்மான எண்.2865,**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் 23</u>

**<u>92– வது வாவுபலி பொருட்காட்சி 14–07–2017 முதல் 02–08–2017 முடியவுள்ள காலத்திற்கு பொது ஏல உரிமை இனஙகள் மற்றும் ஏல நிபந்தனைகள்</u>**

| வ. எண் | குத்தகை உரிம இனத்தின் பெயர் | வைப்புத் தொகை ரூபாய் வஙகி வரைவோலை | மின் இணைப்பிற்க்கான வைப்புத்தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் பக்கக் காட்சி அமைத்து நடத்தும் உரிமை | 30,00,000 | – |
| 2 | பொருட்காட்சி திடலில் நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் ஒலி பெருக்கியில் மட்டும் விளம்பரம் செய்யும் உரிமம் | 6,00,000 | – |
| 3 | நகராட்சி குறிப்பிட்ட இடத்தில் கடை கட்டி ஐஸ் மற்றும் ஐஸ்கிரீம் விற்பனை செய்ய | 2,50,000 | 25,000 |
| 4 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கடை கட்டி கூல் டிறிங்ஸ் விற்பனை செய்ய | 75,000 | 10,000 |
| 5 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கடை கட்டி உணவு விடுதி நடத்த | 1,00,000 | 10,000 |
| 6 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கடை கட்டி அப்பளம் பச்சி கடை நடத்த | 1,00,000 | 5,000 |
| 7 | நகராட்சி கடையில் மட்டும் பாப்கான் விற்பனை செய்ய | 50,000 | 10,000 |
| 8 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் பானி பூரி அமைத்து விற்பனை செய்ய | 1,00,000 | 5,000 |
| 9 | தபால் நிலையம் முன்புள்ள காலியிடத்தில் சிற்றுண்டி அமைக்க | 25,000 | 2,000 |

| | | | |
|---|---|---|---|
| 10 | **நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள ஸ்டால்களில் உரிமங்களுக்குட்பட்ட பொருட்களை விற்பனை செய்ய கடை வாடகை** | | |
| 10 அ | பொருட்காட்சி திடலுக்கு வெளியில், தபால் நிலையம் முன் பக்கம் உள்ள கடைகள் 1 முதல் 11 வரை கடை 1–க்கு | 15,000 | 2,000 |
| 10(ஆ) | பொருட்காட்சி திடலுக்கு வெளியில், பொதுப்பணி துறை பக்கம் உள்ள கடைகள் 1 முதல் 11 வரை கடை 1–க்கு | 10,000 | 2,000 |
| 10 (இ) | வேலுத்தம்பி திடலில் அமைக்கப்பட்டுள்ள ஸ்டால் 1 முதல் 20 வரை கடை 1–க்கு | 5,000 | 2,000 |
| 10(ஈ) | பொருட்காட்சி திடலுக்குள் உள்ள கடைகள் 1 முதல் 36 வரை கடை 1–க்கு | 25,000 | 5,000 |

<u>மேற்கண்ட அனைத்து இனங்களுக்கும் பொது நிபந்தனைகள்</u>

குழித்துறை நகராட்சியால் ஆண்டுதோறும் ஆடி அமாவாசையை முன்னிட்டு நகராட்சியால் நடத்தப்படும் வாவுபலி பொருட்காட்சியை நடத்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (ந.நி.3) துறை அரசு ஆணை எண்.34, நாள் 22–06–2000–ன்படி இப்பொருட்காட்சியை ஆண்டுதோறும் நடத்துபவதற்கு நிரந்தர அனுமதி குழித்துறை நகராட்சி ஆணையருக்கு அனுமதி வழஙகப்பட்டதின்படி 92–வது வாவுபலி பொருட்காட்சி 14–07–2017 முதல் 02–08–2017 முடிய நடத்துவதற்கு கீழ்கண்ட நிபந்தனைகள் பின் வருமாறு.

1) வாவுபலி பொருட்காட்சி ஏலத்தில் கலந்துக் கொள்பவர்கள் விண்ணப்ப படிவம் ரூ.250/–ஐ செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

2) ஏலத்தில் கலந்துக் கொள்பவர்கள் Passport அளவிலான புகைப்படத்துடன் ஆதார் அடையாள அட்டை மற்றும் கைபேசி, தொலைபேசி எண் கொடுக்க வேண்டும்.

3) விண்ணப்பத்தில் புகைப்படம் ஒட்டப்பட்ட நபர் மட்டும் தான் ஏலத்தில் கலந்துக் கொள்ள வேண்டும் எக்காரணம் கொண்டும் மாற்று நபர் ஏலத்தில் கலந்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது. ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் பெயரிலுள்ள வரி மற்றும் வரியில்லா இனஙகள் நிலுவை செலுத்தி ஏலத்தில் கலந்துக் கொள்ள வேண்டும். ஏதேனும் வரி பாக்கி இருந்தால் ஏலத்தில் கலந்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது

4) வைப்புத் தொகை செலுத்த வேண்டிய இனங்களுக்கு வைப்புத் தொகை இனணத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட வேண்டும்.

5) ஏலத்தை முடிவு செய்ய மன்றம் அல்லது ஒப்பந்தக்குழுவிற்குத்தான் அதிகாரம் உண்டு. மன்றம் ஒப்புதல் அளித்த பின்புதான் உத்தரவு வழஙகப்படும். உத்தரவுப் பெற்றுக் கொண்ட இரண்டு தினஙகளுக்குள், இரண்டாவது மற்றும் அதை தொடர்ந்து வரும் மறுஏலஙகளுக்கு குத்தகை தொகையை 12.00 மணி நேரத்திற்குள் முழுத்தொகையையும் நகராட்சி கஜனாவில் செலுத்தப்பட வேண்டும். தவறினால் வைப்புத் தொகை பறிமுதல் செய்து விட்டு இரண்டாவது ஏலக்கேள்விதாரருக்கு ஏலம் உறுதி செய்து கொடுக்க நகராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி இருவரும் கட்டத்தவறினால் இருவருடைய வைப்புத்தொகைகளும் மறு அறிவிப்பின்றி பறிமுதல் செய்யப்படும். மேற்கொண்டு மறுஏலமோ

அல்லது மறு ஒப்பந்தப்புள்ளியோ வரவழைக்கப்பட்டாலும் இலாகா மூலம் நடத்தப்பட்டு முதலில் கேட்கப்பட்ட ஏலத்தொகை/ ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு குறைவு ஏற்பட்டால் முதல் ஏலத்தாரர்/ஒப்பந்தத்தாரரிடம் ஈடு செய்ய நகர் மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

6) ஏலத்தை/ஒப்பந்தப்புள்ளியை ஒத்திவைக்கவோ அல்லது வேறு ஒருதேதிக்கு தள்ளி வைக்கவோ ஆணையருக்கு அதிகாரம் உண்டு.

7) ஏலத்தை ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் நடத்தப்படும்.

8) ஏலம்/ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்து உத்தரவு வழங்கும்போது உத்தரவில் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் ரூ.50/– மதிப்புள்ள அரசு முத்திரைத்தாளில் ஒப்பந்தப்பத்திரம் உரிமம் பெற்றவர் அவரது சொந்த செலவில் ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட வேண்டும். தவறினால் உரிமம் வழங்கப்பட்ட இடத்தில் அன்னாரை பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டாது.

9) உரிமம் பெற்றவர் நகராட்சியின் முன் அனுமதியின்றி பொருட்காட்சி திடலுக்குள்ளும் வெளியிலும் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள். நகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை எந்த வகையிலும் நிலுவையிருந்தாலும் அதனை செலுத்திய பின்னர் தான் அவுட்பாஸ் (Out- Pass) வழங்கப்படும்.

10. நகராட்சியிடமோ, வேறு துறையினரிடமோ பெற வேண்டிய உரிமம் மற்றும் செலுத்த வேண்டிய உரிமம் கட்டணம் மற்றும் வரிகளை உரிமை பெற்றவர் தனது சொந்த செலவில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

11. இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் புயல், வெள்ளம், தீ, மழை, பந்த், மற்றும் இனக்கலவரம் போன்றவைகளால் ஏற்படும் இழப்புகளுக்கும் நஷ்டத்திற்கும் நகராட்சி பொறுப்பாகாது.

12. நகராட்சி அனுமதியுடன் பக்ககாட்சி அமைப்பாளர் தஙகள் சொந்த செலவில் மின் இணைப்பு பெற்று அதற்கான மின் கட்டணத்தையும் மின்சார வாரியத்திற்கு செலுத்திட வேண்டும்.

13. ஒலிபெருக்கி மற்றும் வீடியோ மூலம் விளம்பரம் செய்பவர்களுக்கு நகராட்சியால் மின் இணைப்பு வழங்கப்படும். இதற்காக கட்டணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. எக்காரணத்தைக் கொண்டும் விளம்பர போர்டுகள், பானர்கள், சுவரொட்டிகள் அமைக்க அனுமதி கிடையாது.

14. ரிக்கார்டு டான்ஸ், சூதாட்டம், திறமை விளையாட்டு மற்றும் அபாயகரமான பொது மக்களுக்கும் பொருட்காட்சிக்கும் தீஙகுவிளைவிக்கக் கூடிய எந்தவொரு இனஙகளையும் கண்டிப்பாக பொருட்காட்சி திடலுக்குள்ளும், வெளியிலும் அனுமதிக்கப்பட மாட்டாது. துறைகளால் தடை செய்யக்கூடிய நிகழ்ச்சிகள் பொருட்காட்சி அரசாணையில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டுத்தான் பக்கக்காட்சி அமைக்கப்பட வேண்டும்.

15) கூடுதலாக பெறப்படும் ஏலம் அல்லது ஒப்பந்தப்புள்ளி தொகையினை மன்ற ஒப்புதல் பெற்று உரிமம் வழஙகப்படும்.

16) ஏலம் அல்லது ஒப்பந்தப்புள்ளித் (கூடுதலாக) தொகையை மன்ற ஒப்புதல் பெற்று அறிவிப்பு வழஙகிய மூன்று தினஙகளுக்குள் தொகையாக நகராட்சியில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

17) ஏலத்தொகையை அறிவிப்பு செய்யப்பட்ட 7 தினஙகளுக்குள் செலுத்தாதபட்சத்தில் எவ்வித முன்னறிவிப்பு மின்றி இரண்டாம் நபருக்கு உரிமம் வழஙக ஆணையருக்கு அதிகாரம் உண்டு.

18) ஏலம் கூடுதலாக எடுத்தவர் மூன்று தினத்திற்குள் ஏலத்தொகையை செலுத்தப்பட வேண்டும். தவறினால் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

19) நகராட்சி ஆணையர் குறிப்பிட்டுள்ள ஏலப்பொறுப்புத் தொகை ஆணையர் குழித்துறை நகராட்சி பெயரில் வரைவோலையாக எடுத்து ஒப்படைத்த பின் ஏலத்தில் கலந்துக் கொள்ள வேண்டும்.

20) ஒரே நபர் இரண்டு இனஙகளுக்கு மட்டும் தான் கலந்துக் கொள்ள இயலும்.

21) நகராட்சியால் குறிப்பிடப்பட்டுள்ள இடஙகளில் மட்டும் தான் குத்தகைதாரர் உரிமம் நடத்தப்பட வேண்டும்.

22) கூல்ரிஙஸ், ஹோட்டல், பானிபூரி, அப்பளம், பஜ்ஜி கடை மற்றும் ஐஸ்கிரீம் நடத்தும் உரிமம்தாரர் நகராட்சி குறிப்பிடும் இடத்தில் நகராட்சி வழஙகும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள கடைகளின் அளவில் மட்டுமே கடைகள் அமைக்கப்படவேண்டும். குறிப்பிட்ட அளவில் கடையினை தஙகளின் சொந்த செலவில் தீ பிடிக்காத கூரை அமைத்து கடை அமைக்கப்பட வேண்டும்.

23) பொருட்காட்சி திடல் உள் பகுதியிலும் வெளிப்பகுதியிலும் நகராட்சியால் அமைத்து கொடுக்கும் அனைத்து கடைகளுக்கும் 40W குழல் விளக்கு ஒன்று மட்டும் இலவசமாக பொருத்தப்படும். அதற்கு மேல் அதிகமாக நகராட்சி அனுமதி பெற்று அமைக்கப்படும் விளக்குகளுக்கு 40W ஒன்றிற்கு நாள் ஒன்றுக்கு ரூ.20/– வீதம் நகராட்சி பணியாளர்களால் மின் கட்டணம் வசூல் செய்யப்படும். நகராட்சி கடைகள் தவிர வெளிகடைகளுக்கு நகராட்சியின் மின்சாரம் எடுப்பதற்கு அனுமதி இல்லை. நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு கூடுதலாக தேவைப்படும் மின் இணைப்பை குத்தகைதாரர் நகராட்சி அனுமதி பெற்று குத்ததைதாரரின் சொந்த செலவில் இவ்வலுவலக பணியாளர்கள் மேற்பார்வையில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஒலி, ஒளி அமைப்பாளர் மின் விளக்குகளுக்கும் மின்சாரத்திற்கும், கடைகளில் பணம் வசூல் செய்ய அனுமதி இல்லை. ஒலி ஒளி நகராட்சி அனுமதியளிக்கும் இடத்தில் மட்டுமே அமைக்க வேண்டும்.

24) நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் தான் கட்டயமாக பக்கக் காட்சி அமைத்து நடத்தப்பட வேண்டும்.

25) பக்கக்காட்சி நடத்தும் இடத்தில் பொருள்சேதம், உயிர்சேதம் ஏற்பட்டால் குத்தகைதாரர் தனது சொந்த செலவில் இழப்பீடு வழஙக வேண்டும்.

26) பக்கக்காட்சி எடுக்கும் குத்தகைதாரர் நகராட்சி குறிப்பிடும் இடத்தில் வரைபடத்தின்படி கபடி நடத்த 50’x50’ அளவுகள் இடம் விட்டுதான் அனைத்து பக்கக்காட்சி இனஙகளும் அமைக்கப்பட வேண்டும்.

27) வி.எல்.சி. திருமண மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் போதும் கபடி போட்டி நடைபெறும் போதும் ஒலிபெருக்கி மூலம் விளம்பரமும் பக்கக்காட்சி விளம்பரமும் கண்டிப்பாக செய்யக் கூடாது. கபடிப்போட்டிக்கான இடத்தில் பக்காட்சி அமைக்ககூடாது.

28) குத்தகை இனஙகளுக்கு மத்திய, மாநில அரசுகளால் அவ்வப்போது அறிவிக்கும் நிபந்தனைகள் மற்றும் வரிகள் பொருந்தும்.

29 ) ஏலத்திற்கான கட்டுப்பாடுகள் அனைத்தும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்களுக்கும் பொருந்தும்.

30) பறவைகள் அல்லது மிருகங்கள் மற்றும் சூதாட்டம், ரிக்கார்டு டான்ஸ் போன்ற பொழுதுபோக்கு அம்சங்கள் வைக்க கூடாது.

31) கட்சி சின்னஙகளே கொடிகளோ மதசமந்தமானவை குறித்த பிரச்சாரஙகளே நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்பட மாட்டாது.

32) பக்கக்காட்சி உரிமைதாரர் எக்காரணம் கொண்டும் விற்பனைக்குட்பட்ட பொருட்களை விற்க கூடாது.

33) பொருட்காட்சி திடலுக்கு வெளியில் எந்தவொரு பக்கக்காட்சியோ, படகு போக்குவரத்தோ அமைக்க அனுமதி கிடையாது.

34) 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018–ம் ஆண்டிற்குரிய குத்தகை இனஙகளுக்குரிய பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் இதற்கு பொருந்தும்.

35) பக்கக்காட்சி அமைப்பவா் தீ தடுப்பு துறைச் சான்று மற்றும் பொதுப்பணித்துறையிடம் பக்கக்காட்சி பொருட்களுக்கான உறுதி சான்று (Stability Certificate) தனது சொந்த செலவில் பெற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு நகராட்சி பொறுப்பேற்காது.

36) பொருட்காட்சி திடலுக்கு வெளியில் 1 முதல் 4 வரையுள்ள ஸ்டால்களில் கரும்பு வியாபாரம் மட்டும் தான் செய்ய வேண்டும்.

37) பொருட்காட்சி திடலுக்குள் ஏலத்தில் விடப்பட்ட இனஙகளை தவிர வேறு வியாபாரம் செய்யக் கூடாது.

38) பொருட்காட்சி திடலில் நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள ஒலி பெருக்கியில் மட்டும் விளம்பரம் செய்ய வேண்டும்.

39 ) நகராட்சியால் குறிப்பிடும் இடத்தில் ஐஸ்கிரீம் விற்பனை செய்ய வேண்டும்.

40 ) நகராட்சியால் குறிப்பிடும் இடத்தில் கூல்டிரிஙஸ் விற்பனை செய்ய வேண்டும்.

41 ) நகராட்சியால் குறிப்பிடும் இடத்தில் மட்டும் குறிப்பிட்ட அளவில் உணவு விடுதி அமைத்து விற்பனை செய்ய வேண்டும்.

42) நகராட்சியால் குறிப்பிடும் இடத்தில் குறிப்பிட்ட அளவில் அப்பளம் பஜ்ஜி கடை அமைத்து நடத்த வேண்டும்.

43) நகராட்சி ஸ்டாலில் மட்டும் பாப்கான் விற்பனை செய்ய வேண்டும். பக்கக்காட்சி திடலில் பாப்கான் மற்றும் விற்பனை பொருட்கள் விற்க அனுமதி மறுக்கப்படுகிறது.

44) நகராட்சியால் குறிப்பிடும் இடத்தில் குறிப்பிட்ட அளவில் பானிபூரி அமைத்து விற்பனை செய்ய வேண்டும்.

45) நகராட்சியால் கட்டி கொடுக்கும் கடைகள் அனைத்தும் உரிமம்தாரர்கள் எக்காரணம் கொண்டும் கடையினை கூடுதலாக கட்ட கூடாது.

46) நகராட்சி அனுமதியின்றி விளம்பரம் பேனர்கள், தட்டி, போர்டுகள் வைக்க கூடாது.

47) தபால் அலுவலகம் முன்னால் உள்ள கடைகள் 11–ம், சிற்றுண்டி கடை ஒன்றும், வேலுத்தம்பி திடலில் உள்ள கடைகள் 20–ம், பொதுப்பணித்துறை பக்கம் உள்ள கடைகள் –11–ம் பொருட்காட்சி திடலுக்கு கீழ் பகுதியில் உள்ள நிரந்தரமான 12 ஸ்டால்களும், பொருட்காட்சி திடலுக்குள் உள்ள 30 கடைகளும், பொருட்காட்சி திடலுக்குள் கீழ்பக்கம் உள்ள நிரந்தரமான ஸ்டால்களில் 1 மற்றும் 2 ஸ்டால்கள் நகராட்சி ஸ்டால்களும், 3–வது ஸ்டால் பாப்கான் ஸ்டாலும், மற்றுமுள்ள ஸ்டால்கள் அலுவலக ஸ்டால்களும், வடக்கு பக்கம் பானிபூரியும், பொருட்காட்சி திடலுக்குள் உள்ள கூல்டிரிங்ஸ் கடையும் எம்.எல்.எ. அலுவலகம் மேற்குப் பகுதியில் காட்சி கூடமும், இடைப்பட்ட பகுதியில் இலாகாக்களின் அரங்கமும் அதனை தொடர்ந்து ஐஸ்கிரீம் ஸ்டாலும் அதனை தொடர்ந்து காவலர் அரங்கும், பொருட்காட்சி திடலுக்கு வெளியே செல்லும் பக்கத்தில் ஹோட்டலும் அதனை ஒட்டி தீயணைப்பு துறை வெளிப்புற அலுவலகமும் அதனை ஒட்டி அப்பள பஜ்ஜி கடையும் எஞ்சிய பகுதியில் பக்கக் காட்சியும் இடம் பெறும் அனைத்து கடைகளும் அந்தந்த வருடங்களில் மாற்றி அமைக்கப்படும்.

48) பொருட்காட்சி திடலுக்குள் ஏலம் விடப்பட்ட குத்தகை இனஙகளுக்கு குத்தகை தொகையில் வருமான வரி 1 % செலுத்தப்பட வேண்டும்.

49 ) குத்தகை இனஙகளுக்கு உரிய குத்தகை தொகைக்கு மத்திய அரசாணையின்படி சேவைவரி 15% குத்தகை தொகையுடன் சேர்த்து செலுத்தப்பட வேண்டும்.

50) குத்தகை இனம் வரிசை எண்.1–ல் உள்ள குத்தகை உரிமத்தின் குத்தகைத்தாரர் அரசு வாகனஙகள் தவிர வேறு தனியார் வாகனஙகளை உள்ளே அனுமதிக்க கூடாது.

51) குத்தகை இனம் வரிசை எண்.2 பொருட்காட்சி திடலில் நகராட்சியால் குறிப்பிடும் இடத்தில் ஒலிபெருக்கி வைத்து விளம்பரம் செய்ய வேண்டும்.

52) ஒலி பெருக்கி வைத்து விளம்பரம் செய்யும் உரிமத்திற்கு நான்கு, 12” இன்ஞ்ச் ஸ்பிக்கர் ( Speaker) உள்ள இரண்டு பாக்ஸ் வைக்க வேண்டும்.

53) பொருட்காட்சி நடைபெறும் நாட்களில் விளம்பர போர்டுகளோ, பேனர்களோ வைக்க விரும்பும் நிறுவனங்கள் நகராட்சி குறிப்பிடும் இடத்தில் நகராட்சியின் அனுமதி பெற்றும் அதற்கான வரையறுக்கப்பட்ட கட்டணத்தினை நகராட்சியில் செலுத்தி அதற்கேற்ப அமைக்கப்பட வேண்டும்.

54) விளம்பரம் செய்யும் உரிமத்தாரர் பொருட்காட்சி திடலுக்குள்ளும், வெளியிலும் கடைகாரர்கள் விநியோகிக்கும் விளம்பர நோட்டீஸ்கள் விளம்பரக் கட்டணம் வசூலிக்க கூடாது.

55) ஒலி ஒளி அமைக்கும் உரிமைதாரர் நகராட்சியால் குறிப்பிடும் அளவுகளில் 4 சீரியல் ஆர்ச் 70 அடி உயரத்தில் தஙகளின் சொந்த செலவில் அமைக்க வேண்டும். இப்படி கட்டப்பட்ட ஆர்சில் ‘‘குழித்துறை நகராட்சி 92–வது வாவுபலி பொருட்காட்சி’’ என்று எழுதப்பட வேண்டும். ஒலி ஒளி அமைக்கும் உரிமைதாரர் நகராட்சியால் குறிப்பிடும் இடஙகளில் மட்டும் ஒலி பெருக்கி வைத்து இயக்கம் செய்ய வேண்டும். குழித்துறை சந்திப்பு, குழித்துறை தபால் நியைம், கழுவன்திட்டை சந்திப்பு, வெட்டுவெந்நி சந்திப்புகளில் அமைக்க வேண்டும்.

56) மேற்கண்ட குத்தகை இனஙகளில் ஏலத்தொகை (அ) ஒப்பந்தப்புள்ளி கேள்விக்கு மேல் கோர விருப்பமுள்ள குத்தகைத்தாரர் ஏலம் முடிந்த 24 மணி நேரத்திற்குள் உயர்ந்த ஏலத்தொகையிவிட 10 % முழுமையாக ரொக்கமாக நகராட்சி கருவூலகத்தில் செலுத்தி

எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு முழு தொகையினையும் செலுத்தி தெரிவிக்கும் பட்சத்தில் தங்களின் மனுவினை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

57) வளைவு அலஙகார அர்ச் அமைக்க பந்தல்காரர் மட்டுமே ஒப்பந்தபுள்ளியில் அல்லது எலத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

58) கடையினுள் மின்சார கட்டணம் வசூலிப்பது நகராட்சி பொறுப்பில் எடுத்துக் கொள்ளப்படும். ஒலி, ஒளி குத்தகைதாரர் நகராட்சி அனுமதியின்றி பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள கடைகளுக்கு மின்விளக்கு போன்ற சாதனஙகள் அமைக்க கூடாது.

59) பொருட்காட்சியில் பக்ககாட்சி நடைபெறும் பகுதிக்குள் 500 அடிக்குள் ஏற்கனவே உள்ள நிரந்தர கடைகள் தவிர புதியதாக ஐஸ்கீரீம் கடை பாப்கான்கடை, பானிபூரி, அப்பளம் பஜ்ஜிகடை, உணவு விடுதி போன்றவை நடத்துவதற்கு அனுமதி கிடையாது மீறுவோர்மீது காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

60) குழித்துறை நகராட்சியால் இதற்கு முன்னர் நடைபெற்ற வாவுபலி பொருட்காட்சியில் கடைகள் மற்றும் ஏனைய இனஙகள் குத்தகைக்கு எடுக்கப்பட்டு குத்தகை தொகை செலுத்தாமலும் கடைகளை திறக்காமலும் நகராட்சிக்கு நிதியிழப்பும் மற்றும் அவமானம் ஏற்படுத்திய குத்தகைதாரர்கள் மற்றும் நகராட்சியினை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையாக உள்ளவர்கள் வரும் வாவுபலி பொருட்காட்சிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டாது.

61) 92–வது வாவுபலி பொருட்காட்சியில் கடைகள் எடுக்கப்படும் குத்தகைதாரர்கள் துவக்கவிழா தொடஙகி 2–வது தினத்திலேயே கடைகள் அமைக்கப்படவேண்டும். அவ்வாறு கடைகளை குத்தகைக்கு எடுத்து இரண்டு நாட்களில் கடைகளை அமைக்காத பட்சத்தில் அதிகமான குத்தகை தொகைக்கு எடுத்த 2–வது நபருக்கு கடைகளை அமைப்பதற்கு நகராட்சி ஆணையாளரால் அனுமதி வழஙகப்படும். 2–வது நபருக்கு அனுமதி வழஙகும் பட்சத்தில் ஒன்றாவது நபரால் கோரப்பட்ட குத்தகை தொகைக்கும் 2–வது நபரால் கோரப்பட்ட குத்தகை தொகைக்கும் உள்ள வித்தியாச தொகையினை ஒன்றாவது நபரின் வைப்புத் தொகையில் ஈடு செய்யப்படும். நிலுவைத்தொகைக்காக முதல் நபரின் மீது நீதி மன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

62) 92–வது வாவுபலி பொருட்காட்சியில் பக்ககாட்சி எடுக்கும் குத்தகைதாரர் நகராட்சி அலுவலர்கள், மற்றும் நகராட்சி ஊழியர்களுக்கு பக்ககாட்சியில் இடம் பெற்றுள்ள அனைத்து இனஙகளுக்கும் ஒருகுடும்பத்திற்கு (7 நபர்கள்) அவர்கள் விரும்பும் தேதியில் ஒவ்வொன்றும் ஒருமுறை கட்டாயம் பார்வையிடவும், பயன்படுத்திடவும் அனுமதிக்க வேண்டும். பொருட்காட்சி துவஙகும் நாளன்றே பாஸ் வழஙகப்படவேண்டும்.

63) மத்திய, மாநில அரசினால் அவ்வப்போது அறிவிக்கப்படும் ஆணைகள் மற்றும் சுற்றறிக்கைகள் ஒப்பந்தகாரர் மற்றும் குத்தகைதாரர்களுக்கு பொருந்தும்.

மேற்கண்ட நிபந்தனைகளுடன் கூடிய உபவிதிகள் தமிழ்நாடு நகராட்சி சட்ட பிரிவு 306–ன் படி தயார் செய்யப்பட்டு மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டு நடை முறைப்படுத்தப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2866**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 24

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலைய கட்டண கழிப்பறையினை **1.4.2015** முதல் வைப்புத்தொகை ரூ. **1,00,000** செலுத்தி திரு. ஸ்டான்லி ஜெபராஜ் என்பவர் ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு குத்தகை தொகை ரூ. **1,31,500/–**ம் செலுத்திவிட்டு வருடா, வருடம் **5** சதவிகிதம் உயர்வு செய்து மூன்று வருட காலம் குத்தகை உரிமத்தினை நடத்தி தற்போது உரிம காலம் முடிந்துவிட்டது. மேற்படி உரிமைதாரர் **2014/2015–**ம் வருடகாலத்தில் செலுத்திய வைப்புத்தொகைரூ.**1,00,000/–** திருப்பி கேட்டு விண்ணப்பம் கொடுத்துள்ளார். குத்தகை உரிமகாலம் முடிந்துவிட்டதாலும், மேற்படி உரிமத்திற்க்கு நிலுவை ஏதும் இல்லாததால் காலங்கடந்த வைப்புத்தொகையினை திருப்பி வழங்க மன்றம் தீர்மானிக்கப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2867,**

**அனுமதிக்கப்பட்டது**

ஒப்பம்/–
தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்(பொ)
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.